தேவகோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் செல்வி.செ.பார்கவி.பி.இ.,

ந.க.எண்:00288/2024/எப்1 நாள்.27.03.2024

பொருள்	மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டது– தேவகோட்டை நகராட்சி – வார்டு எண்.K பிளாக் எண்.1, சர்வே எண்.82/7–ல், பரப்பளவு 4251.8 சதுரமீட்டர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்டு உத்தரவு பிறப்பித்தல் – தொடர்பாக.
பார்வை	1)உதவிஇயக்குநர்(பொ)நகர் ஊரமைப்பு துறை சிவகங்கை மாவட்டம் ந.க.எண்.SWP-FADVYBIX/2024/TCP நாள் 09.02.2024. 2)தேவகோட்டை நகராட்சிக்கு அளிக்கப்பட்ட தானப்பத்திரம், பத்திரப்பதிவு எண் 340/2024 நாள் 23.01.2024. 3)நகராட்சி பொறியாளர் குறிப்பு நாள் 07.03.2024,27.03.2024 4)நகர்மன்ற தீர்மான எண்.496, நாள் 08.03.2024.

****

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட நித்தியகல்யாணிபுரம் மேற்கு வார்டு எண்-K, பிளாக் எண்-1, சர்வே எண்-82/7–ல், பரப்பளவு 4251.8 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தை 17 மனைகள் அடங்கிய மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் எண்.340/2024 நாள் 23.01.2024–ன்படி சாலைகள், உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துள்ளார். மனைப்பிரிவுற்கு கூராய்வு கட்டணம் ரூ.6378 நாள் 08.01.2024, திறந்த வெளி ஒதுக்கீடு கட்டணம் ரூ.1319500. நாள் 06.02.2024 மற்றும் நன்னிலை கட்டணம் ரூ.7500/– 08.02.2024ன்படி, நகர் ஊரமைப்பு துறைக்கு இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது . நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மனைப்பிரிவு அனுமதி கட்டணங்கள் கூடுதல் ரூ.128600/– 05.03.2024–ல், நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

நகராட்சி பொறியாளர் குறிப்பில்,மனைப்பிரிவில் தார்சாலைகள் உரிமையாளரால் அமைக்கப்பட்டுள்ளது, மின்கம்பங்களுடன் கூடிய மின்கம்பங்கள் அமைப்பதற்க்கு மதிபீட்டு தொகை மின்சாரவாரியத்திற்க்கு ரசீது எண் PGCCAN620241019 ரூ81970-/-27.03.2024ல் நாளிட்ட ரசீது மூலம் செலுத்தப்பட்டுள்ளது என உள்ளது.உரிமையாளர் மனைப்பிரிவில் மழைநீர் வடிகால்கள்,தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் குழாய்கள் வீடுகள் கட்டப்படும்போது அமைத்து தருவதாக சம்மதக்கடிதம் கொடுத்துள்ளார். மனைப்பிரிவில் வடிகால் வசதி, தெருவிளக்கு வசதி, குடிநீர் வசதி ஆகியவைகளை நகராட்சி உத்தரவிடும் போது உரிமையாளர்களால்அமைத்துதரப்பட வேண்டும்.என்ற நிபந்தனைகளும் மற்றும் மின்கம்பங்களுடன் கூடிய மின்கம்பங்கள்

அமைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைகளும் விதிக்கப்படுகிறது.. இந்நகர்மன்ற தீர்மான எண்.496, நாள் 08.03.2024ல் மனைப்பிரிவின் சாலைகள், உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் ஆகியவற்றை நகராட்சி வசம் ஏற்றுக்கொண்டும் மற்றும் வடிகால் வசதி, தெருவிளக்கு வசதி, குடிநீர் வசதிகளை நகராட்சி உத்தரவிடும் போது அமைத்து தர வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டும் மனைப்பிரிவிற்க்கு நகர் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. எனவே மேற்படி வார்டு எண்-K, பிளாக் எண்-1, நகரளவு எண்82/7–ல், 17 மனைகள் 4251.8 ச.மீ பரப்பளவு அடங்கிய மனைப்பிரிவினை அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.மேலும் நகராட்சி விதித்துள்ள நிபந்தனைகளின்படி உரிமையாளர் செயல்படாத பட்சத்தில் சட்டபடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது

27/3/24

ஆணையாளர்,
தேவகோட்டை நகராட்சி

27/3/24

பெறுநர்–
1)திருமதி.தெ.மங்கையர்க்கரசி,
க/பெ.தெட்சிணாமூர்த்தி,
கதவு எண்:7,நித்தியகல்யாணிபுரம் 4வது வீதி, தேவகோட்டை.